# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 08.07.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

கடந்த நாளன்று ஜெர்மனியின் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நான் சென்றிருந்தேன் என்பதை நாம் அறிவோம். இதைப் பற்றி நான் எனது கடந்த குத்பாவில் கூறினேன். இறையருளை மாநாட்டில் நாம் பார்த்ததையும் உணர்ந்ததையும் நான் எடுத்துரைத்தேன். இதைத் தவிர ஜெர்மனியின் ஜமாஅத்துகள் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சிகளிலும் அந்த அருட்கொடைகள் தென்பட்டன. இறை அருளின் புதிய புதிய பகுதிகள் நமக்கு தென்பட்டன. ஜமாஅத்தின் அறிமுகத்திற்காகப் புதிய வழிகள் திறந்தன. ஜெர்மனி ஜமாஅத் இதிலிருந்து அதிக அளவில் பலன் பெற முயற்சி செய்ய வேண்டும்.

ஜெர்மனியைத் தவிர ஐரோப்பாவின் சில ஜமாஅத்துகளிலும் நான் சற்று தங்கினேன். போகும் போது பெல்ஜியத்திலும், திரும்பும் போது ஹாலந்திலும் தங்கினேன். இங்கு கொஞ்ச நேரம் தங்கினாலும் இறை அருள் இங்கும் தென்பட்டது. பெல்ஜியத்தில் ஓரிரவு மட்டும் தங்கினேன். மாலையில் அங்கு சென்று சேர்ந்தோம். அப்போதே புதிய அஹ்மதி நண்பர்களுடன் ஜமாஅத்திற்கு நெருங்கிய நண்பர்களுடனும் ஒரு சந்திப்புக் கூட்டம் நடந்தது. அதில் சுமார் 60 – 70 பேர்கள் ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர். அவர்களிடம் சிலவற்றைச் சொல்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தக் கூட்டத்தின் போது ஜமாஅத்திற்கு நெருங்கியவர்களுக்கு இறைவன் அவர்களின் உள்ளத்தை திறந்தான். இறைவன் அவர்களுக்கு பைஅத் செய்வதற்கான நற்பாக்கியத்தையும் வழங்கினான்.

அந்தக் கூட்டத்தில் நான் அவர்களுக்கு கூறியதாவது, ஆகரீன்கள் மத்தியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோன்றியுள்ளார்கள். ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் பணியைத் தொடர்ந்து செய்வதற்காகவே தோன்றியுள்ளார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அறிவற்ற, மிருகங்களைப் போன்று செயல்பட்ட மக்களுக்கு உண்மையான மனித இயல்பின் மதிப்பை அடையாளம் காட்டினார்கள். அவர்களை மனிதனாகவும், படிப்பறிவு மிகுந்த மனிதனாக மாற்றி, பிறகு இறைவனுக்கு நெருக்கமானவர்களாகவும் மாற்றினார்கள். இவ்வாறு அவர்கள் இறை வடிவான மனிதர்களாக மாறினார்கள். தமது பிறவியின் நோக்கத்தை அவர்கள் அறிந்ததது மட்டுமின்றி, அதை அடைவதற்கு உண்மையான முயற்சியும் செய்தனர். அதில் உயர் தரத்தையும் அடைந்தனர். அவர்களுக்கு உலகத்தின் அனைத்தும் துட்சமாகத் தெரியும் அளவிற்கு இறைவனுடன் உறுதியான தொடர்பு ஏற்பட்டது. அவர்களின் உலகமே மார்க்கமாக மாறிவிட்டது. திருக்குர்ஆனின் முன்னறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மில் இதைத்தான் உருவாக்க வந்துள்ளார்கள் என்று கூறினேன்.

அந்தக் கூட்டத்தில் ஒருவரை நான் அஹ்மதி என்று கருதினேன். ஆனால் அவர் பைஅத் செய்யாதவராக இருந்தார் என்பது எனக்கு பிறகுதான் தெரிய வந்தது. ஆனால் அவர் ஜமாஅத்திற்கு மிகவும் நெருங்கியவராவார். நான் பேசி முடித்தவுடன் அனுமதி பெற்று எழுந்து நின்று மிகவும் உணர்ச்சி பொங்க, ‘‘மனிதர்களை இறை வடிவான மனிதர்களாக மாற்றுவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பணியாகும் என்று நீங்கள் கூறியதைக் கேட்டு நான் என்னையும் சீர்திருத்துவேன் இன்ஷா அல்லாஹ். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு உதவியாளர்களாக இருந்து இஸ்லாத்தின் உண்மையான போதனையை உலகத்தில் பரப்பி உலகத்தை இறைவனுக்கு அருகில் கொண்டு வருவேன் என்று உறுதி செய்கிறேன்’’ என்று கூறினார். மேலும், ‘‘இன்று நான் அஹ்மதிய்யத்தில் இணைவதாக

அறிவிக்கிறேன். இதற்கு முன் சில சந்தேகங்கள் இருந்தாலும் உங்களது உரையைக் கேட்டு அவை நீங்கி விட்டன. எனது பைஅத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்றார்.

இதன்படி அவர் பைஅத் செய்தார். இவருடன் இன்னும் 7 – 8 பேர் பைஅத் செய்தனர். இதன் விரிவான அறிக்கையை வகாலத்துத் தஃப்ஷீரின் தலைவர் எழுதி வருகிறார். இது அல் ஃபஸ்ல் பத்திரிகையில் வெளி வருகின்றது. பைஅத் செய்த எல்லாருடைய நிலையும் மிகவும் உணர்ச்சிப்பூர்வமாக இருந்தது. நாம் நமது இவ்வுலகையும் மறுவுலகையும் சீர்செய்வதற்காக என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவைகளை கண்டிப்பாக செய்வோம் என்ற ஒரு உறுதிப்பாடு அவர்களிடம் இருந்தது. நாம் பெற்றதை பிறருக்கும் கொண்டு சேர்ப்போம் என்று அவர்கள் உறுதி எடுத்தனர். அங்கு பைஅத் செய்து புதிதாக வந்தவர்களிடம் தப்லீக் செய்வதற்கான ஆர்வம் அதிகமாக இருந்தது. அவர்கள் முதலில் தமது குடும்பத்தினர், நெருங்கிய உறவினர்கள் ஆகியவர்களிடம் தப்லீகை ஆரம்பிக்கின்றனர். மெல்ல மெல்ல அவர்களை உண்மையான இஸ்லாத்தின் வழியில் கொண்டு வந்து கொண்டிருக்கின்றனர். இறைவனின் அருளால் அவர்களிடம் இதற்காக ஒரு சிறப்பான ஊக்கம் பிறந்துள்ளது.

கடந்த ஜுமுஆவிலிருந்து மூன்று நாள்கள் பெல்ஜியத்திலும் ஆண்டு மாநாடு நடந்தது என்று நான் ஏற்கனவே கூறினேன். இதை நான் கடந்த ஜுமுஆ குத்பாவில் கூற முடியாமல் போனது. இறை அருளால் பெல்ஜியத்தின் அஹ்மதிய்யா ஜமாஅத் இப்போது புதிய பைஅத்துகள், புதிய தொடர்புகள் மற்றும் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை பரப்புவதில் மிகவும் உத்வேகத்துடன் முன்னேறி வருகிறது. உண்மையில் இறைவனே வழிகளை திறந்து விடுகின்றான். இறைவன் திறந்து தருகின்ற வழிகளின் மூலம் நாம் முழுமையாக பலன்பெற வேண்டும். இதுவே இறைவனுக்கு நாம் செலுத்தும் நன்றியாகும். நாம் புதிதாக வருபவர்களை பராமரிக்க வேண்டும். அதே சமயம் நம்முடைய சுய சீர்திருத்தத்தின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும்.

நான் முன்னதாக கூறியதற்கிணங்க நான் திரும்பும் வழியில் ஹாலந்திலும் தங்கினேன். ஹாலந்தின் ஆண்டு மாநாடு இன்று முதல் தொடங்குகிறது. இறைவன் அதில் கலந்து கொள்பவர்களுக்கு மாநாடுகளின் அருளைப் பெறுவதற்கான வாய்ப்பினை வழங்குவானாக! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்த துஆக்களுக்கு வாரிசாக்குவானாக! இந்த மாநாட்டை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக்குவானாக! இவர்களும் தப்லீக் மற்றும் தர்பிய்யத்தின் மைதானத்தில் மிக அதிகமாக முன்னேறுபவர்களாக ஆகட்டுமாக! அங்கு இஸ்லாத்திற்கெதிராக அவ்வப்போது ஆங்காங்கே குரல் எழுந்து கொண்டிருக்கிறது. எனவே அவர்கள் மிக அதிகமான கடின உழைப்பும் துஆவும் செய்ய வேண்டும்; முயற்சியும் செய்ய வேண்டும். கிளை அமைப்புகளும் ஜமாஅத்தும் பல ஆக்கப்பூர்வமான நிகழ்ச்சிகளை நடத்தி ஜமாஅத்தின் அழகிய போதனைகளை நாட்டின் ஒவ்வொரு குடிமகனிடமும் கொண்டு சேர்ப்பபைப் பற்றி ஆலோசிக்க வேண்டும். எவ்வாறிருப்பினும் நான் எனது பயணத்தைப் பற்றி கூறிக் கொண்டிருந்தேன். அங்கு நான் சிறிய காலம் தங்கினேன். அப்போது அரபி மொழி பேசக்கூடிய சில புதிய அஹ்மதிகள் மற்றும் ஜமாஅத்திற்கு அருகில் வருகின்ற மக்களுடன் சந்திப்பு நிகழ்ந்தது. அப்போது ஜமாஅத்திற்கு நெருங்கிய ஒரு நண்பர் பைஅத்தும் செய்தார்.

இறைவன் நமக்கு சாதகமாக காற்றை வீசச் செய்துள்ளான். இந்த மக்களுக்கு மன நிம்மதிக்கான ஏற்பாட்டை இறைவன் மிகவும் வியக்கத்தக்க அளவில் செய்கிறான். அஹ்மதிய்யத்தன் உண்மைத்துவத்தை இவர்களுக்கு புரிய வைக்கிறான். இந்த அருட்கொடைகளிலிருந்து பலன்பெறுவதற்கு நாம் நம் தரப்பிலிருந்தும் முழு அளவில் முயற்சி செய்வது நமது கடமையாகும். இதனால் இம்மக்கள் எவ்வளவு விரைவாக அஹ்மதிய்யத்திற்கு அருகில் வர முடியுமோ அவ்வளவு விரைவாக வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். புதிதாக வருகின்ற மக்களின் உணர்ச்சியை சொற்களால் கூற முடியாது. இந்த இரு நாடுகளைப் பற்றியும் நான் சுருக்கமாக கூறியுள்ளேன். கொஞ்ச நாட்கள் ஓரிடத்தில் தங்கினாலும் அங்கே இறையருளின் காட்சிகளைக் காணும் அளவிற்கு இறைவன் புறமிருந்து அருளின் காற்று வீசுகிறது. புதிதாக இணைபவர்கள்

மிகவும் புத்துணர்ச்சியுடனும் உத்வேகத்துடனும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தூதுச் செய்தியை பரப்பும் பணியைச் செய்வதாக அறிவிக்கிறார்கள். இவர்களிடம் காணப்படும் இந்தப் புரட்சி ஒரு சில வினாடிகளில் உருவாவதை நம்மால் பார்க்க முடிகிறது. அவர்கள் சந்திக்க வருகின்றனர்; உட்கார்ந்து உரையாடுகின்றனர். அப்போது வியக்கத்தக்க நிலை அவர்களிடம் உருவாகிறது. அங்கிருந்து எழுந்து செல்லும் போது ஒரு புதிய உற்சாகத்துடனும் புத்துணர்ச்சியுடனும் எழுந்து செல்கின்றனர்.

சிறப்பான இந்த அருட்கொடையானது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறைவனின் புறமிருந்து வழங்கப்பட்டதாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறக்கப்பட்ட இந்த இல்ஹாமின் புதிய புதிய பகுதிகள் விளங்குகின்றன. இறைவன் கூறுகிறான்:

வானத்திலிருந்து நாம் வஹி அறிவிக்கும் மனிதர்களைக் கொண்டு நாம் உமக்கு உதவி செய்வோம்.

இது உண்மையாகும். இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு இறைவன் உண்மையின் தேட்டத்திற்கான ஊக்கத்தை வழங்கியுள்ளான். இதனால் ஏதாவது ஒரு வழியில் அவர்களுக்கு ஜமாஅத்தின் தொடர்பு கிடைத்தது. அஹ்மதிய்யத் மற்றும் உண்மை இஸ்லாத்தின் அழகிய போதனை அவர்களின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது. இனி மவ்லவிகள் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும், இறைவனே தூய்மையாக்கி ஜமாஅத்தின் பக்கம் கொண்டு வருகின்ற உள்ளங்களை உலகப் பேராசைகள் மற்றும் உலகத்திற்கு அஞ்சி இறைவனால் கொடுக்கப்பட்ட சத்தியம் மற்றும் ஈமானில் உறுதிப்பாடு கொண்ட மக்கள் பலவீனத்தைக் காட்டுபவர்களாக இருக்க முடியாது.

கடந்த சில நாட்களுக்கு முன்னால் கேமரூன் என்ற ஜமாஅத்தின் அறிக்கையை பார்த்துக் கொண்டிருந்தேன். இந்த ஜமாஅத்தின் பணிகள் நைஜீரியாவின் முபல்லிக் இன்சார்ஜிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர் கூறுகிறார்: கேமரூனில் ஆங்கிலம் பேசுகின்ற பகுதிகளுக்குப் பிறகு இப்போது பிரெஞ்சு மொழிப் பேசப்படுகின்ற பகுதிகளிலும் மிகவும் வேகமாக ஜமாஅத் பரவி வருகிறது. இதன் காரணமாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் எதிரிகள் உள்ளூர் மவ்லவிகளும், சில சமயம் தப்லீக் செய்வதற்காக பாகிஸ்தானிய மவ்லவிகளும் அங்கு வந்து விடுவர். இவர்களின் பொறாமையின் நெருப்பு பெருகி வருகிறது. நமது முபல்லிக் எழுதுகிறார்: பாகிஸ்தானின் தப்லீக் ஜமாஅத்தைச் சேர்ந்த ஒரு குழு சில உள்ளூர் முல்லாக்களுடன் சேர்ந்து மே 27 ஆம் தேதி மாங்ஃபே என்ற இடத்திலுள்ள நமது பள்ளியாகிய மஸ்ஜித் பைத்துல் ஹுதாவிற்கு வந்தனர். அங்கு வந்து நமது ஜமாஅத்திற்கு எதிராக தகாத வார்த்தைகளைப் பேசினர். அங்கு ஒன்றுகூடியிருந்த நமது ஜமாஅத்தினரை வழிகெடுக்க முயற்சி செய்தனர். அதற்கு நமது ஜமஅத்தைச் சேர்ந்தவர்கள், இங்கு தொழுவதாக இருந்தால் தொழுது கொள்ளுங்கள். இல்லையென்றால் சென்று விடுங்கள். உங்களது வீண் பேச்சுக்களை நாங்கள் கேட்கத் தயாராக இல்லை என்று கூறினர். உடனே அவர்கள் அங்கிருந்து சென்று விட்டனர். ஆனால் அங்கிருந்து 60 கி.மீ தூரத்தில் உள்ள நமது பள்ளிவாசலாகிய பைத்துஸ் ஸலாமிற்குச் சென்றனர். இந்தப் பள்ளிவாசல் இந்த வருடம் திறக்கப்பட்டதாகும். அந்த ஊரில் உள்ளூர் அளவில் விரிவான ஏற்பாடுகளுடன் கிலாஃபத் தினக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில் கலந்து கொள்வதற்காக மக்கள் எல்லாரும் சென்றிருந்தனர். பள்ளிவாசலில் ஒரு சிலர் மட்டுமே இருந்தனர். எதிரிகள் அவர்களிடம் சென்று வழிகெடுக்க முயன்றனர். ஆனால் அவர்களை வழிகெடுக்க முடியவில்லை. அந்த ஊரின் உள்ளூர் மவ்லவியும் இன்னும் சிலரும் இருந்ததால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. வந்திருந்த மவ்லவிகள் நமது பள்ளிவாசலில் நுழைந்து திருக்குர்ஆனையும் சில புத்தகங்களையும் எடுத்தார்கள். பள்ளிவாசலின் வெளியே வைக்கப்பட்டிருந்த பலகையையும் உடைத்து எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். நமது ஜமாஅத்தினர் கூட்டம் முடிந்து திரும்பியதும் மேலதிகாரிகளை சந்தித்தனர். அரசாங்க உயர் அதிகாரிகளிடமும் சென்று அவர்களையும் இந்த முல்லாக்கள் வழிகெடுத்துள்ளது தெரிய வந்தது. இவர்கள் முஸ்லிம்கள் அல்லவென்றும், இவர்கள் குழப்பவாதிகள், தீவிரவாதத்தைத் தூண்டுபவர்கள், நாட்டிற்கு எதிராக சூழ்ச்சிகள் செய்பவர்கள் என்றும் கூறியுள்ளனர்.

ஆனால் நமது ஜமாஅத்திற்கு அங்கு அதிகாரிகளுடன் நல்லுறவு இருந்தது. பிறகு இந்த விஷயம் Head Administrator (நிர்வாகத் தலைவர்) இடம் சென்றது. இவர்களை பள்ளிவாசலின் திறப்பு விழாவின் போது அழைத்திருந்தோம். அவர் வந்து கலந்து கொண்டார். எனவே இந்தப் பிரச்சனை அவர்களுக்கு எட்டியதும், இப்போது அவர்கள் எல்லாரும் சென்று விட்டனர். இனி அவர்கள் வந்தால் என்னிடம் சொல்லுங்கள். நான் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடுப்பேன். உரிய தண்டனையைப் பெற்றுத் தருவேன் என்று கூறினார்.

இவர்கள் எல்லா இடங்களிலும் தமது முயற்சியை செய்து வருகின்றனர். ஆனால் இறைவன் நமக்கு ஆதரவாகக் காற்று வீசச் செய்துள்ளான். பைஅத் செய்ய வைக்கின்ற அதே வேளையில் ஜமாஅத்தில் இதுவரை இணையாதவர்களின் உள்ளத்தில் மென்மையை உருவாக்குகின்றான். இந்த மக்கள் ஆப்பிரிக்காவில் வசிப்பவர்கள் என்று கூறப்படுகிறது. இவர்கள் உலகக் கல்வியை அதிகம் கற்கவில்லை. ஆனால் இவர்களின் உள்ளத்தை இறைவன் உறுதியான ஒளியால் நிரப்பி விட்டான். அவர்கள் தமது ஈமானில் உறுதியாக உள்ளனர். இனி இந்த பெயர் தாங்கிய ஆலிம்களின் வலையில் சிக்குபவர்கள் இல்லை. ஈமானை விட்டு விலகுவது ஷய்த்தானின் வேலையாகும். ஷய்த்தான் இறைவனிடம், என் இறைவா! உனது தூய நல்லடியார்கள் மட்டுமே எனது பிடியில் சிக்கமாட்டார்கள். மற்றவர்களை நான் ஒவ்வொரு வழியிலிருந்தும் கெடுக்க முயற்சி செய்வேன் என்று கூறினான். எனவே வழிகெடுப்பவர்கள் தமது பணியை செய்து கொண்டே இருக்கட்டும். ஆனால் இறைவனுடன் தூய தொடர்பு ஏற்பட்ட மக்கள், சத்தியம் கண்ணுக்கு தெரிந்த மக்கள், இறைவனின் தூய நல்லடியார்களாக இருக்கின்ற மக்கள் ஆகியோர்கள் இன்ஷா அல்லாஹ் எப்போதும் ஈமானில் நிலைத்திருப்பார்கள். இந்த வெளிப்பாடு எல்லா இடங்களிலும் நமக்குத் தென்படுகிறது.

இப்போது நான் இன்னும் சில சம்பவங்களை எடுத்துரைக்கிறேன். சிலருக்கு ஆச்சரியமூட்டும் வகையில் இறைவன் எவ்வாறு வழிகாட்டுகின்றான்? என்பதை இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம்.

**கிரிகிஸ்தானிலிருந்து நமது முபல்லிக் எழுதுகிறார்:**

ஆப்தர் சாஹிப் கடந்த ரமலான் மாதத்தின் போது பைஅத் செய்தார். அவர் ஒரு மார்க்க இயக்கத்தின் உறுப்பினராக இருந்தார். அவர் ஒருமுறை இவ்வாறு கூறினார். நான் தீமைகளிலிருந்து தவிர்ந்திருக்கவும், நேர்வழியில் நடப்பதற்காகவும் எனது ஆசிரியர் எனக்கு ஒரு துஆவை கற்றுத் தந்தார். அந்த துஆவை ஒரு வருடத்திற்கு முன்னால் நான் கற்றேன். ஆனால் நான் அந்த துஆவை செய்யவில்லை. ஆனால் மூன்று நான்கு தினங்களுக்கு முன்பு இறைவனிடம் இவ்வாறு துஆ செய்தேன். இறைவா! உனது அருளால் எனக்கு நேர்வழியைக் காட்டுவாயாக! என்று வேண்டினேன். இந்த துஆவை செய்து மூன்று நான்கு நாட்களுக்குப் பிறகு ஒரு கனவு கண்டேன். அந்தக் கனவில், நான் ஒரு மலையின் உச்சியில் நிற்கிறேன். அங்கு இன்னும் பல மலை உச்சிகள் இருக்கின்றன. நான் ஒரு உச்சியிலிருந்து குதித்து இன்னொரு உச்சிக்கு செல்கிறேன். அப்போது முன்னாலிருந்து இரண்டு குரங்குகள் வந்தன. அதில் ஒரு குரங்கு எனது வலப்புறம் தாவிக் கொண்டது. இன்னொன்று எனக்கு நேராக வருகிறது. அப்போது மிகவும் வலிமை வாய்ந்த ஒன்று வந்து, தனது வலிமையால் அந்தக் குரங்கை என்னை விட்டு தூர விலக்கி விட்டு என் உயிரைக் காப்பாற்றியது. இந்தக் கனவைக் கண்டு நான் கண்விழித்து விட்டேன். இது என்ன கனவு? என்று நான் வியப்படைந்தேன். இதற்கு சில நாட்கள் கழித்து அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் எனக்கு தொடர்பு ஏற்பட்டது. ஜமாஅத்தைப் பற்றி எனக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. நான் சில நூல்களைப் படித்து பின்னர், இறையருளால் பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்தேன். அதன் பிறகு நான் கண்ட கனவிற்கான விளக்கம் தெரிந்தது. ஹதீஸின் அடிப்படையில் இக்காலத்தில் சீர்கெட்ட ஆலிம்கள் குரங்குகளாவர். அஹ்மதிய்யா ஜமாஅத் என்னை இதிலிருந்து காப்பாற்றியது என்பதை புரிந்து கொண்டேன்.

பிறகு இந்தோனேஷியாவைச் சேர்ந்த ஒரு நண்பர் உள்ளார். இவர் பைஅத் செய்து சில வருடங்கள் ஆகின்றன. அவர் கூறுகிறார்: நான் ஒருமுறை நோய்வாய்ப்பட்டேன். இராணுவ மருத்துவமனையில்

சேர்க்கப்பட்டிருந்தேன். மயக்கம் தெளிந்ததும் நான் ஒரு கஷ்ஃப் கண்டேன். அறையின் கூரை தொலைக்காட்சிப் பெட்டியின் திரையைப் போன்று பெரிதாக தென்பட்டது. முதலில் அதில் அரபி மொழியில் இவ்வாறு வாக்கியம் எழுதப்பட்டிருந்ததைப் பார்த்தேன். அதன் பிறகு திருக்குர்ஆனும், சில ஹதீஸ்களும் காட்டப்பட்டன. இறுதியில் இந்த சொற்கள் ஒன்றன்பின் ஒன்றாக காட்டப்பட்டன. அதாவது இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் முன் மரணிக்கக் கூடாது. கியாமத் இன்னும் வரவில்லை. மனிதனின் வாழ்க்கை ஒரு புத்தகத்தைப் போன்றதாகும். அந்த புத்தகம் மனிதனின் பிறப்பைப் போன்று திறக்கப்படுகிறது. பிறகு மனிதனின் மரணத்தைப் போன்று மூடி விடுகிறது. பிறகு ஏதாவதொரு நேரம் இது மீண்டும் திறக்கப்படும். இந்த சொற்களுக்கு மத்தியில் ஒரு வாக்கியத்தில் விவில் சாஹிப் ஆச்சரியமடைந்தார். இது அவரது பெயராகும். அந்த வாக்கியம் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் முன் இறக்கக் கூடாது என்ற வாக்கியமாகும். அவர் நான் ஒரு முஸ்லிமாவேன். நான் ஒரு முஸ்லிமாக இருந்தும் எனக்கு இந்த வாக்கியம் காட்டப்பட்டுள்ளதே என்று மிகவும் வியப்படைந்தார். பிறகு அவர் ஆரோக்கியமடைந்ததும் பல புத்தகங்களைப் படித்தார். இஸ்லாத்தில் 73 பிரிவுகள் உண்டாகும் என்ற ஹதீஸை அவர் வாசித்தார். அந்தப் பிரிவில் ஒன்று மட்டும் வெற்றிக்குரியதாகும். மற்றவை நரகிற்குரியவை என்று ஹதீஸை அவர் வாசித்தார். அதன் பிறகு அவர் அஹ்லே சுன்னத் வல் ஜமாஅத் பிரிவைத் தேடினார். அவர் தமது ஏதாவதொரு ஆலிம் அல்லது மவ்லவியை சந்திக்கும் போதெல்லாம் இதைப் பற்றி கேள்வி கேட்பார். அதற்கு அஹ்லே சுன்னத் வல் ஜமாஅத்தைச் சேர்ந்த நாம் தான் அந்த கூட்டத்தினர் என்றே பதில் கிடைத்தது. ஆனால் இந்த பதில் சரியானதென்று அவர் உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளவில்லை. பல வருடங்களாக அவர் அந்த ஒரு கூட்டத்தைத் தேடிக் கொண்டேயிருந்தார். அவருக்கு எங்குமே கிடைக்கவில்லை. ஒருநாள் அவர் ஹஜ் செய்வதற்காக மக்கா சென்ற போது அங்கும் அஹ்லே சுன்னத் வல் ஜமாஅத் பிரிவை யாரும் பின்பற்றவில்லை. 1998 -ல் இவர் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றார். பிறகு இவர் பைஅத் செய்தார். இவர் தனது நிம்மதியின்மையைப் பற்றி ஒருவரிடம் கூறினார். இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இது என்னவென்று கேட்டார். பிறகு நமது ஜமாஅத்தைச் சேர்ந்தவர் அவரிடம் கூறினார். ஜமாஅத் என்று கூறினால் அந்த ஜமாஅத்திற்கு ஒரு இமாம் இருக்க வேண்டும். அவரைப் பின்பற்றுபவர்களும் இருக்க வேண்டும் என்றார். பிறகு இன்னும் விளங்குவதற்காக இமாம் என்பவர் உலகத்திற்கு தலைவராக இருக்க வேண்டும். அவரைப் பின்பற்றுபவர்கள் அவருக்கு முழுமையாகக் கட்டுப்படுபவர்களாக இருக்க வேண்டும். அந்த அஹ்மதி கர்ணல் சாஹிப், இந்த அஹ்மதியல்லாத கர்ணர் சாஹிபிடம் இப்போது உலகில் தலைமை கொண்ட ஒரே ஜமாஅத் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் ஒன்றுதான் என்று கூறினார். இந்த இமாம், ரஸூல் (ஸல்) அவர்களின் மஹ்தி, அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களின் கலீஃபா ஆவார்கள் என்றும் கூறினார். அப்போது விவில் சாஹிப் உலமாக்களின் பார்வையில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் மிர்ஸா குலாம் அஹ்மத் என்பவர் நவூதுபில்லாஹ் ஒரு குழப்பவாதியாவாரே! என்று கூறினார். இதற்கு பதில் கொடுக்கும் முகமாக அஹ்மதி கர்ணல் சாஹிப் பல உண்மைகளை எடுத்துக் கூறினார். ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி இக்காலத்தில் இமாம் மஹ்தியாவார்கள் என்று வாதம் புரிந்தார். இதற்குப் பிறகு விவில் சாஹிப் கூறுகிறார். எனது ஈமான் நாளுக்கு நாள் வளர்ந்தது. இறுதியில் அவர் பைஅத் செய்தார். பைஅத் செய்த பின்பு தப்லீகின் வழியில் அவர் முன்னேறி வருகிறார். அவருடைய தப்லீகிற்கான ஆர்வத்தைப் பற்றி அங்குள்ள முபல்லிக் சாஹிப் இவருக்கு பைத்தியம் பிடித்திருக்கும் அளவிற்கு தப்லீக் செய்கிறார் என்று எழுதியுள்ளார். இவர் மூலம் சில ஜமாஅத்துகளும் உருவாகியுள்ளன.

**கேம்பியாவின் அமீர் சாஹிப் கூறுகிறார்கள்:**

அப்பர் ரிபர் ரீஜியனில் சிராயே மஹ்மூத் என்ற பெயரில் ஓர் ஊர் உள்ளது. அங்கு நமது ஒரு பள்ளிவாசல் உள்ளது. இந்தப் பள்ளிவாசலில் அஹ்மதிகளும் அஹ்மதி அல்லாதவர்களும் சேர்ந்து தொழுது வருகின்றனர். இரண்டு மாதங்களுக்கு முன்பு பக்கத்திலுள்ள ஊரில் அஹ்மதி அல்லாதவர்கள் தமக்கு ஒரு

பள்ளிவாசலைக் கட்டினர். சராயே மஹ்மூதிலிருந்து அஹ்மதி அல்லாதவர்கள் இந்தப் புதிய பள்ளிவாசலில் சென்று ஜுமுஆ தொழுகை தொழ வேண்டும் என்று எண்ணினர். வெள்ளிக்கிழமை அன்று சுபுஹ் தொழுகைக்குப் பிறகு காட்டில் விறகு வெட்டுவதற்காகச் சென்றேன். பிறகு வீடு திரும்பி ஜுமுஆவிற்கு முன்பு சற்று நேரம் உறங்கினேன். அப்போது கனவில் அவர் அஹ்மதிகளின் பள்ளிவாசலுக்கு ஜுமுஆ தொழுகைக்காகச் செல்கிறார். நீர் எந்தப் பள்ளிவாசலை விட்டு விட்டுச் செல்கின்றீரோ அது இறைவனின் பார்வையில் அதிகமாக ஏற்றுக் கொள்ளப்படும் தகுதியுடையதாகும் என்று கனவில் கூறப்பட்டது. கண்விழித்த பிறகு அஹ்மதிய்யா பள்ளிவாசலுக்குச் சென்றார். அங்கு தாம் கண்ட கனவை கூறினார். எனக்கு சத்தியம் தெரிந்து விட்டது. அஹ்மதிய்யத் உண்மையானது என்று கூறி அவர் பைஅத் செய்து விட்டார். இப்போது அவர் மிகவும் தூய்மையான அஹ்மதியாவார்.

**கேம்பியாவின் அமீர் சாஹிப் எழுதுகிறார்கள்:**

கன்ஃபின்டா என்ற ஊர் அங்கு உள்ளது. அந்த ஊரைச் சேர்ந்த சாம்பா ஜாலூ சாஹிப் ஒரு கனவு கண்டார். வெண்ணிற ஆடையுடன் சிலர் பாகிஸ்தானிய உடை அணிந்து ஓரிடத்தில் வந்துள்ளனர். இவர்கள் யார்? என்று இவர் கேட்கிறார். அப்போது இவர்கள் காதியானைச் சேர்ந்தவர்களாவர் என்று பதில் கூறப்படுகிறது. மேலும் இக்காலத்தில் வரவிருக்கின்ற மஹ்தியுடன் உள்ளவர்களாவர் என்று கூறப்படுகிறது. காதியான் என்றால் என்ன? அது எங்கிருக்கிறது? என்றெல்லாம் சாம்பா சாஹிபிற்கு தெரியாது. அந்தக் கனவில் அவர் சூரியனும் சந்திரனும் ஒன்றன்பின் ஒன்றாக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்கிறது. அப்போது வெள்ளை நிற ஆடை அணிந்திருந்தவர்கள் இவரிடம் இது மஸீஹ் மற்றும் மஹ்தி தோன்றுவதற்கான அடையாளமாகும் என்று கூறுகின்றனர். பிறகு சாம்பா சாஹிப் கராஃபீனி டவுனுக்கு வந்ததும் கேம்பியாவின் அமீர் சாஹிபை பார்த்தார். எனக்கு கனவில் காட்டப்பட்டவர்கள் இப்படித்தான் இருந்தனர் என்று அவர் கூறினார். பிறகு அவருக்கு ஜமாஅத்தைப் பற்றி அறிமுகம் செய்யப்பட்டது. அவர் அங்கேயே பைஅத் செய்து விட்டார். பைஅத் செய்வதற்கு முன் சாம்பா சாஹிப் முல்லாக்களைப் பின்பற்றி முஷ்ரிக்கான வாழ்க்கையை வாழ்ந்து வந்தார். பைஅத் செய்த பிறகு இவர் ஐவேளை தொழக் கூடியவரானார். மேலும் பொருள் உதவியில் மிகவும் முன்னணியில் நிற்பவராவார். ஜமாஅத்தின் சந்தாக்களில் மிகவும் முன்னேறியுள்ளார். இப்போது தூய்மையான வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார்.

முஹம்மது ரம்ஜான் சாஹிப் ஒருமுறை நமது முபல்லிக் சாஹிபிடம் வந்தார். இது ஒரு பழைய சம்பவமாகும். அவர் நான் உங்கள் ஜமாஅத்தில் இணைய விரும்புகிறேன் என்று கூறினார். நமது முபல்லிக் கூறுகிறார். மஹ்மூத் ஷரஹ் சாஹிப் முபல்லிக் அந்த காலத்தில் தன்ஸானியாவில் பணியாற்றி வந்தார்கள். இப்போது அவர் ஷஹீதாகி விட்டார்கள். இது அவர்களின் சம்பவமாகும். அவர்கள் கூறினார்கள்: நீங்கள் ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகத்தைப் பெற்றீர்களா? என்று கேட்டேன். அதற்கு அவர் நான் ஏற்கனவே இரண்டு முறை நேரத்தை வீணாக்கி விட்டேன். இப்போது மூன்றாவது முறையாக எனக்கு கனவில் வழிகாட்டப்பட்டுள்ளது. எனவே கண்டிப்பாக பைஅத் செய்ய வேண்டும் என்று நான் முடிவு செய்துள்ளேன் என்று கூறினார். அவர் இறைவனிடம் நேர்வழியை வேண்டியதாக கூறினார். உண்மையாளர்கள் யார்? என்று வேண்டியுள்ளார். கனவில் எனக்கு மூன்று முறை மொராக்கோவின் அஹ்மதிய்யா பள்ளிவாசல் காட்டப்பட்டது. இறுதியாக நான் கண்ட கனவில், நான் ஒரு மலையில் இருக்கிறேன். அங்கு எல்லா பக்கமும் ஒளி சூழ்ந்துள்ளது. என்னை அஹ்மதியத்திலிருந்து தடுத்தவர்கள் மிகவும் கீழேயுள்ளனர். இவ்வாறு கனவில் கண்டேன். எனவே இன்று நான் பைஅத் செய்ய வந்துள்ளேன் என்று கூறி பைஅத் படிவத்தை நிரப்பினார். அத்துடன் சந்தாக்களையும் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். நான் வந்து சேர வேண்டிய இடத்திற்கு சேர்ந்து விட்டேன் என்று கூறினார்.

**அல்ஜீரியாவைச் சேர்ந்த முஹம்மது ராபே சாஹிப் கூறுகிறார்கள்:**

நான் ஒரு வருடத்திற்கும் மேலாக M.T.A.பார்த்துக் கொண்டிருந்தேன். தொடக்கத்தில் ஈஸா (அலை) அவர்களது மரணம், தஜ்ஜால் மற்றும் இமாம் மஹ்தி இவ்வாறு பலவற்றைப் பற்றி ஜமாஅத்தின் கருத்துக்களைக் கேட்டு மிகவும் ஆச்சரியம் அடைந்தேன். இஸ்திகாரா தொழுத பிறகு ஒருமுறை இவ்வாறு கனவு கண்டேன். முஸ்தஃபா ஸாபித் சாஹிப் மற்றும் ஷரீஃப் சாஹிபுடன் ஒரு பள்ளிவாசலில் இருக்கிறேன். உங்களுக்கு இமாம் மஹ்தியைப் பற்றி எப்படி தெரியும்? என்று கேட்டார்கள். அதற்கு நான் இஸ்திகாரா தொழுததன் மூலம் தெரிய வந்தது என்றேன். நான் தொடக்கத்திலிருந்தே இமாம் மஹ்தியின் தோற்றத்திற்காக காத்துக் கொண்டிருந்தேன். மேலும் அவருடன் இணைந்து போர் செய்ய நான் விரும்பினேன் என்று கூறினார்கள். அதன் பிறகு நான் அஹ்மதியாகி விட்டேன். ஆனால் எனது நண்பர்களும் எனது தந்தையாரும் என்னை விட்டு விட்டனர். ஆனால் எனக்கு எந்தக் கவலையும் இல்லை. நான் இறைவனின் விருப்பத்தையே விரும்புகிறேன் என்று கூறி பைஅத்திற்காக விண்ணப்பித்தார்கள்.

**ஜிம்பாப்வே நாட்டின் முபல்லிக் சாஹிப் எழுதுகிறார்கள்:**

இங்கு முஸ்லிம் யூத் என்ற ஒரு பிரிவின் ஒரு பொறுப்பாளர் பைஅத் செய்தார். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பாக அவர் ஒரு கிறித்தவ சர்ச்சின் உறுப்பினராக இருந்தார். அவருக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்காக பாதிரி ஒரு தேதியை அறிவித்தார். அந்த தேதியன்று பாதிரிக்கு உடல்நிலை சரியில்லாமல் ஆனது. இரண்டாவது ஒரு தேதியை குறிப்பிட்டார். அன்று பாதிரியின் தாயார் உடல்நிலை சரியில்லாமல் ஆனார். மூன்றாவதாக நாள் குறித்த போது அன்று பலத்த மழை பெய்தது. அங்கு யாராலும் செல்ல முடியவில்லை. அதன் பிறகு அந்த இளைஞர் ஒரு கனவு கண்டார். ஒரு கூட்டம் நடக்கிறது. அங்கு ஒரு பக்கம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நின்று இவரை தம் பக்கம் அழைக்கிறார்கள். ஆனால் இவரால் அங்கு போக முடியவில்லை. இவர் எப்படியாவது பள்ளிவாசலுக்கு போக வேண்டும் என்று முயற்சி செய்கிறார். அப்போது அவர் கண் விழித்தார். அதன் பிறகு அவர் கிறித்தவத்தை விட்டு விட்டார். பைஅத் செய்வதற்கு முன் அந்த இளைஞர் ஒரு கனவு கண்டார். அவருடைய உடல் முழுவதும் கழுத்து வரை சேற்றில் மாட்டிக் கொண்டது. அவரை யாரோ ஒருவர் பிடித்து சேற்றிலிருந்து வெளியே கொண்டு வந்து விட்டார். அவரிடம் நமது முபல்லிக் உங்களை சேற்றிலிருந்து வெளியே கொண்டு வந்தவர் யார் என்று உங்களுக்கு தெரியுமா? அவருடைய முகம் ஞாபகமிருக்கிறதா? என்று கேட்டார். அதற்கு அவர் ஆம் எனக்கு நினைவிருக்கிறது என்று கூறினார். அவருக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புகைப்படத்தைக் காட்டியதும் இந்த முகம் தான் என்னைப் பிடித்து சேற்றிலிருந்து வெளியேற்றியது என்று கூறினார்.

**புர்கீனோபாஸோவிலிருந்து நமது முபல்லிக் எழுதுகிறார்:**

புல்டிங்கா என்ற ஓர் ஊர் உள்ளது. அங்கு தப்லீகின் சுற்றுப் பயணத்தின் போது ஒரு பெரியவரை சந்தித்தோம். அவருடைய வயது 65 ஆகும். அவர் பைஅத் செய்தார். பைஅத் செய்த பிறகு அவர் கூறினார்: நீங்கள் வருவதற்கு முன் ஒரு கனவில் ஒரு பெரியவரைக் கண்டேன். அவர் என்னிடம் ஆதம் (அலை) இறங்கியுள்ளார்கள். அவரை ஏற்றுக் கொள் என்று கூறினார். ஒரு மாத காலத்திற்குப் பிறகு அதே பெரியவர் என்னை சந்தித்து ஆதம் (அலை) இறங்கியுள்ளார்கள். அவரை ஏற்றுக் கொள் என்றார்கள். நீங்கள் பைஅத் செய்துள்ள ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறைவன் ஆதம் என்று பெயர் வைத்துள்ளான் என்று அவருக்கு விளக்கிக் கூறப்பட்டது. இவ்வாறு அவர் கண்ட கனவு நிறைவேறியதால் அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அதன் பிறகு அவர் தமது குடும்பத்தாரிடம் தப்லீக் செய்து ஏறக்குறைய நூறு பேரை ஜமாஅத்தில் சேர்த்துள்ளார்.

**எகிப்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி ஹால்லா சாஹிபா கூறுகிறார்:**

நான் ஒரு கனவில் இமாம் மஹ்தி மற்றும் அவரது ஜமாஅத் தண்ணீரின் மீது நடப்பதைப் பார்த்தேன். நான் அவர்களுடன் சேர்ந்து கொள்வதற்காக விண்ணப்பித்தேன். அவர்கள் திரும்ப வரும் போது நாம் உங்களை அழைத்துச் செல்வோம் என்று கூறினார்கள். இந்தக் கனவை கண்ட பிறகு சூஃபியிஸத்தில் சத்தியத்தை தேட ஆரம்பித்தேன். ஆனால் மன நிம்மதி ஏற்படவில்லை. எனது கனவுக்கு சூஃபியிஸம் பொருளாகாது என்பதை நான் அறிவேன். நான் சூஃபிகளைத்தான் கனவில் கண்டேன் என்று அவர்கள் பிடிவாதம் செய்தனர். நான் வீட்டில் வந்து பல்வேறு சேனல்களைப் பார்த்தேன். அப்போது M.T.A. அல் அரேபிய்யா தென்பட்டது. நான் மிகவும் ஆச்சரியத்திற்கு ஆளானேன். நான், தண்ணீரில் நடப்பதாக கனவில் கண்ட அந்த நபரை தொலைக்காட்சியில் கண்டேன் என்று கூறுகிறார்கள். பின்னர் அவர் கனவில் என்னையும் கண்டதாக கூறுகிறார்கள்.

எனவே இவ்வாறு கலீஃபாக்களை கனவில் பார்ப்பவர்கள் அறிந்து கொள்ளுங்கள். அதாவது இறைவன் மக்களுக்கு காட்டுகின்ற இவ்வாறான கனவின் மூலம் கூறுவதாவது கிலாஃபத் என்பது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தொடர்ச்சியாகும்.

**போர்டநோவோ, பெனினிலிருந்து நமது முபல்லிக் சாஹிப் எழுதுகிறார்:**

எங்கள் வீட்டில் பணி செய்வதற்காக லதீஃபா என்ற பெயரைக் கொண்ட ஒரு பெண் ஒருவர் வந்தார். அவள் கொஞ்ச நாளில் உடல்நிலை சரியில்லாமல் போனார். இரண்டு மூன்று வாரங்கள் விடுப்பு எடுத்தார். U.K. –வின் ஆண்டு மாநாடு நடக்கவிருந்த போது அவர் மீண்டும் பணிக்கு வர ஆரம்பித்தார். அப்போது அவர் எனது மனைவியிடம் எனக்கு இரண்டு மூன்று முறை நோயுற்றிருந்த போது கனவு வந்தது. அது என்னை மிகவும் பாதிப்பிற்குள்ளாக்கியது. அந்த கனவு வரக் காரணம் என்ன என்பதைக் கூறும் போது நோயுற்றிருந்ததால் அதிகமாக துஆ செய்து கொண்டிருந்தேன். இறைவா! எனது பாவங்களை மன்னிப்பாயாக! என்னையும் எனது பெண் குழந்தையையும் கடுமையாக இருக்கும் இந்தக் காய்ச்சலிலிருந்து காப்பாயாக! எங்களுக்கு நேரான வழியில் இருக்கும் போது மரணத்தை வழங்குவாயாக! என்று துஆ செய்து விட்டு தூங்கினேன். ஒருநாள் கனவில் அவர், இவ்வாறு கண்டதாக கூறுகிறார்: எனது அறை மிகவும் ஒளி மிகுந்ததாகி விட்டது. எல்லா பக்கமும் ஒளியாக இருந்தது. இதைப் பார்த்து நான் பயந்து கொண்டிருந்தேன். அப்போது மிகவும் அழகான மனிதரான வெள்ளை நிறைமுடையவர் தோன்றி என்னை தன் பக்கம் அழைத்தார். இத்துடன் அந்தக் கனவு முடிந்து விட்டது. அதன் பிறகு இரண்டு மூன்று தினங்கள் கழித்து அதே சம்பவத்தை மீண்டும் கனவில் கண்டார். அந்த மனிதர் மிகப்பெரிய வெள்ளை நிற வீட்டில் நுழைகிறார். பிறகு மக்களின் கையைப் பிடித்து ஏதோ பேசுகிறார். அங்கு கருப்புநிற மனிதர்களும் வெள்ளை நிற மனிதர்களும் அதிகமாக உள்ளனர். எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும் உள்ளனர். அவர் கூறுகின்ற வாக்கியங்களை அவரோடு சேர்ந்து மக்களும் கூறுகின்றனர். பிறகு நின்று கொண்டு ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களைப் பற்றி பேசுகிறார்கள். இந்த பெண்மணி முபல்லிக் சாஹிபின் மனைவியிடம் இந்தக் கனவைக் கூறிய போது U.K. ன் ஆண்டு மாநாட்டில் உலகளாவிய பைஅத் நிகழ்ச்சி நடந்தது. நான் அவர்களிடம் நீ கண்ட கனவு சரியாகப் புரியவில்லை. எனினும் நீ சொல்வதை வைத்துப் பார்க்கும் போது அவரையும் அழைத்து வா பைஅத் நடக்கும் இடத்திற்கு பள்ளிவாசலில் நிகழ்ச்சி நடந்தது. அந்தப் பெண்ணும் வந்தார். M.T.A.–வில் நிகழ்ச்சி வந்த போது மீண்டும் மீண்டும் அவரது மனைவியின் முட்டியில் அடித்து இந்தக் காட்சியைத்தான் நான் கனவில் கண்டேன் என்று கூறினார். உலகளாவிய பைஅத் நடந்த போது கூடாரத்திற்குள் நான் நுழைந்ததைப் பார்த்து முபல்லிக்கின் மனைவியிடம் இந்த மனிதரைத்தான் நான் கனவில் கண்டேன் என்று கூறினார். இது இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடந்த சம்பவமாகும். பாருங்கள். வெள்ளை நிறை கூடாரத்திற்குள் நுழைகிறார்கள். பாருங்கள் அங்கு மக்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று கூறிக்கொண்டே இருந்தார். பின்னர் உலகளாவிய பைஅத்தில் இணைந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார். வீட்டிற்கு சென்றவுடன் மீண்டும் அந்தப் பெண் தான் கண்ட

கனவை கூறினார். முபல்லிக் சாஹிப் அவர்களுக்கு பின்னர் புரிய வைத்தார்கள். இறைவன் உனக்கு நேர்வழியினைக் காட்டியுள்ளான். மிகத் தெளிவாக வழிகாட்டியுள்ளான். எனவே இமாம் மஹ்தியின் ஜமாஅத்தில் இணைந்து விடு. உண்மையான உள்ளத்துடன் இணைந்தால் இதுவே உனது கஷ்டங்களுக்கு தீர்வாகும். காலத்தின் கலீஃபா நேரடியாக உன்னைத் தம் பக்கம் அழைத்துள்ளார்கள். எனவே நீ இதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கூறினார்கள். அதற்கு அந்தப் பெண் பைஅத்தின் வரிகளை நான் எனது நாவால் கூறிவிட்டேன். எனினும் இதை ஏற்றுக் கொள்வதாக இல்லையா என்று சிந்தித்துப் பின்னர் கூறுகிறேன் என்றார். வீட்டிற்கு சென்று இதை அவர் தனது பெற்றோருக்கு எடுத்துக் கூறினார். இந்தப் பெண்ணுக்கு அதிக வயது இருக்கும். இவரது பெற்றோர் வயது முதிர்ந்தவராக இருந்தனர். இவரது தந்தை மிகவும் கோபத்துடன் உன்னை இதற்காகவா நாங்கள் பெற்றோம். உனது மூதாதையர்களின் மார்க்கத்தை கைவிட்டு விட்டாயே! என்றார். எவ்வாறிருப்பினும் ஒருநாள் அந்தப் பெண் வந்து அழுதார். காலத்தின் கலீஃபா மீண்டும் எனது கனவில் வந்தார்கள். அதாவது கனவில் அவர் என்னைப் பார்த்தார். அவர் கனவில் தோன்றி முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி கூறி, என் பக்கம் வந்து விடு என்று வலியுறுத்தினார்கள். இதில் தான் உனக்கு வெற்றியுள்ளது என்று கூறுகிறார்கள். எனவே நான் மிகவும் கவலையாக உள்ளேன். எனக்கு எப்படி மரணம நேரும்? இப்போதே எனக்கு 50 வயதிற்கு மேல் ஆகிவிட்டதே என்று எண்ணி இப்போது நான் அஹ்மதிய்யத்தில் சேர்ந்து விடலாம் என்று தீர்மானித்து விட்டேன். என்னை எனது தந்தையார் கபரின் தண்டனைகளிலிருந்து காப்பாற்ற முடியாது என்று கூறி அவர் பைஅத் செய்து விட்டார். பின்னர் அவர் முறைப்படி சந்தாவும் கொடுக்க ஆரம்பித்து விட்டார்.

இறைவன் இந்த சத்தியத்தை உள்ளங்களில் நிலை கொள்ளச் செய்யும் சம்பவங்கள் எண்ணற்றவை உள்ளன. அவைகளை முழுமையாக சொல்லி விட முடியாது. இன்-ா அல்லாஹ் ஆண்டு மாநாடு நடக்க உள்ளது. இன்னும் சில சம்பவங்களை மாநாட்டிலும் நீங்கள் கேட்பீர்கள். இறைவனின் அருட்கொடையை நீங்கள் கேட்பீர்கள். ஆனால் எல்லாவற்றையும் ஒன்றுசேரக் கூறுவது முடியாது. நான் ஏறகெனவே கூறியுள்ளேன். நடப்பு ஆண்டிலும் நான் இதை கூற ஆரம்பித்து விட்டேன். இதனால் புதியதாக வந்துள்ளவர்களுக்காகவும், நமது ஈமானை உறுதிபடுத்துவதற்காகவும் துஆச் செய்ய முடியும். இறைவனின் இந்த அருட்கொடைகளை எண்ணிப்பார்க்க வேண்டும். இறைவன் தன்னுடைய அருளால் நமக்கு உண்மைக்கான வழியைக் காட்டுகிறான். மேலும் அதில் நிலைத்திருக்கவும் செய்கிறான். இறைவன் தன்னுடைய அருட்கொடைகளின் காட்சிகளை எப்போதும் நமக்குக் காட்டிக் கொண்டே இருப்பானாக! நம் அனைவருக்கும் புதிதாக வருபவர்களுக்கும் உறுதியான பாதத்தை வழங்குவானாக!

உலகத்தில் அஹ்மதிய்யத்திற்கு எதிராக வி-மக் கருத்துக்களைப் பரப்பி தூய உள்ளம் கொண்டவர்களை அஹ்மதிய்யத்திலிருந்து தப்பெண்ணம் கொள்ள வைக்கலாம் என்று மனப்பால் குடிக்கின்றவர்களுக்கு நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் வார்த்தைகளில் இவ்வாறு கூறுகிறேன். அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:

தூங்குபவர்களே! விழித்தெழுங்கள்; கவனமற்றவர்களே! எழுந்து உட்காருங்கள். ஒரு மாபெரும் புரட்சிக்கான நேரம் வந்துவிட்டது. இது அழுவதற்குரிய நேரமாகும்; உறங்கும் நேரமில்ல. இது மன்றாடுவதற்குரிய நேரமாகும்; பரிகாசம் செய்து நிராகரிக்கும் நேரமில்லை. இறைவன் உங்களுக்கு கண்பார்வை வழங்க துஆ செய்யுங்கள். இதனால் எப்போதுள்ள இருளையும் முழுமையாகப் பார்க்க வேண்டும். எனவே இரவுகளில் கண் விழித்து இறைவனிடம் அழுதழுது நேர்வழியை வேண்டுங்கள். இறைவனால் உருவாக்கப்பட்டவரது இயக்கத்தை அழிப்பதற்காக அநியாயமாக துஆ செய்யாதீர்கள். இதற்கான சூழ்ச்சிகளை யோசிக்காதீர்கள். இறைவன் உங்களுடைய கவனமற்ற, மறதியான எண்ணங்களைப் பின்பற்றுவதில்லை. எனவே, உங்களுடைய அறிவு மற்றும் உள்ளத்தின் முட்டாள்தனத்தை உங்களுக்கு வெளிப்படுத்துவான். அவன் தனது அடியார்களுக்கு உதவி செய்வான். அவன் தனது கைகளால்

நட்ட மரத்தை ஒருபோதும் வெட்டமாட்டான். உங்களில் யாராவது கனிகளைத் தரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற செடியை வெட்டி விடுவாரா? அப்படியிருக்க மிகவும் ஞானம் மிகுந்தவனும், எல்லாவற்றையும் நன்கு பார்ப்பவனும், கருணை காட்டுபவர்கள் எல்லாரையும் விட அதிக கருணை காட்டுபவனுமாகிய இறைவன் இந்த செடி கனியைத் தருகின்ற அருளுக்குரிய நாட்களுக்காக காத்துக் கொண்டிருக்கும் தருணத்தில் இதை வெட்டுவானா?

இறைவனின் இந்த தூதுச் செய்தியை புரிந்து கொள்ளும் நல்வாய்ப்பை இவர்களுக்கு வழங்குவானாக.

ஜுமுஆவிற்குப் பிறகு நான் சில ஜனாஸா தொழுகைகளைத் தொழ வைப்பேன். அதைப் பற்றி கூற விரும்புகிறேன்.

**முதலாவது ஜனாஸா** டாக்டர் ஸய்யத் ஃபாரூக் அஹ்மத் சாஹிப் உடையதாகும். இவர் இந்தியாவின் ராஞ்சி என்ற ஊரைச் சேர்ந்த ஸய்யது முஹைய்னுத்தீன் சாஹிபின் மகன் ஆவார். இவர் பர்மிங்கம்மில் வசித்து வந்தார். ஜுலை 6 ஆம் தேதி இவர் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். இவர் டாக்டர் பட்டம் பெற்ற பின் 1958 -ல் இந்தியாவிலுள்ள பாட்னா யுனிவர்சிட்டியில் படித்து தேர்ச்சி பெற்றார்கள். 1964 -ல் இவர் இங்கிலாந்திற்கு வந்தார். Royal College of Surgeons பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். இவர் மிகவும் எளிமையான தூய்மையான விசுவாசமுள்ள அஹ்மதியாவார். ஊக்கம் மிகுந்த தாயியே இலல்லாஹ் ஆவார். பல குடும்பங்களை அஹ்மதிய்யத்தில் சேர்வதற்கான சந்தர்ப்பம் இவர் மூலமாக கிடைத்தது. இவர் தப்லீக் செயலராகவும், ஸயீம் அன்ஸாருல்லாஹ், ஜமாஅத் தலைவர் மற்றும் மண்டல அமீர் என்ற பதவிகளிலிருந்து தொண்டாற்றும் நல்வாய்ப்பை பெற்றார்கள். இவர் பொருள் தியாகத்தில் எப்போதும் முன்னணியில் இருந்து பங்கு பெற்று வந்தார். அமீராக தாம் நிர்வகித்த போது மேற்கு இங்கிலாந்தில் மஸ்ஜித் தாருல் பரக்காத் பெர்மிங்கம்மை தவிர இன்னும் பல பள்ளிவாசல்களைக் கட்டுவதற்கான நல்வாய்ப்பை பெற்றார்கள். இவர் வஸிய்யத் செய்தவராவார். இவருடைய தம்பி ஸய்யத் லயீக் அஹ்மத் கடந்த வருடம் மே 28 -ல் நடந்த சம்பவத்தின்போது ஷஹீதானார்கள். இவர்களது குடும்பம் முழுவதும் தூயவர்கள் அடங்கிய குடும்பமாகும். இறைவன் இவரது பதவிகளை உயர்த்துவானாக.

**இரண்டாவது ஜனாஸா** மதிப்பிற்குரிய சாதிக்கே குத்ஸியா சாஹிபா உடையதாகும். இவர் ராணா அஹ்மத் சாஹிப் சியால்கோட்டியின் மனைவியாவார். இவரது ஒரு மகன் ராணா சபாத் அஹ்மத் ஜமாஅத்தின் முரப்பி ஆவார். இவர் நஸாரத் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யாவில் தொண்டு செய்து வருகிறார்கள். இவர் மார்ச் 21-ல் வஃபாத் ஆனார்கள். 57 வயது ஆகிறது. இவ் பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார்கள். கிராமத்து மக்களுடன் நல்லுறவு இருந்து வந்தது. அந்த ஊரில் இவரது குடும்பம் மட்டுமே அஹ்மதியாகும். இதன் காரணமாக பல சோதனை மிகுந்த சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால் இவர் எப்போதும் உறுதியான பாதத்தையே காட்டியுள்ளார்கள். ஜமாஅத்துடன் தூய்மை மற்றும் விசுவாசத்திற்கான தொடர்பு இருந்து வந்தது. மிகவும் தூய வாழ்க்கை வாழ்ந்தார்கள். தொழுகைகளில் மிகுந்த ஆர்வம் உடையவாக இருந்தார்கள். தப்லீக் செய்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டவராக விளங்கினார்கள். சந்தாவிலும் பர்தாவை பேணுவதிலும் மிகவும் கண்டிப்பாக இருந்தார்கள். இவர் வஸிய்யத் செய்தவராவார்.

**மூன்றாவது ஜனாஸா** ஷாஹித் தால்பூர் உடையது. இவர் நூர் அஹ்மத் சாஹிப் டாக்கூரின் மகன் ஆவார். இவர் ஹைதரபாத்தைச் சேர்ந்தவராவார். இவர் தெற்கு ஆஸ்திரேலியாவில் தற்போது இருந்து வந்தார்கள். அடிலெய்டில் இருந்தார்கள். ஜுன் 22 ஆம் தேதி தனது வீட்டின் முன் இருந்த சாலையைக் கடக்கும் போது இவர் வஃபாத் ஆனார்கள். இவரது வயது 38 ஆகும். இவரது தந்தையார் மிக நீண்ட காலம் ஹைதராபாத்தில் வசித்து வந்தார். இவர் எலக்ட்ரிக்கல் இஞ்சினியரிங் படித்த பின் கொஞ்ச காலம் பாகிஸ்தானில் ஒரு கம்பெனியில் வேலை செய்தார்கள். பிறகு ஆஸ்திரேலியா வந்து குடிபெயர்ந்து விட்டார். இங்கு ஒரு கம்பெனியில் நெட்வொர்க் அனாலிஸ்ட் ஆக வேலை பார்த்துக் கொண்டிருந்தார். பாகிஸ்தானிலும் காயித் பொறுப்பை ஏற்று தொண்டு செய்து வந்தார்கள். இவர் பதக்கங்களை வெல்லக்கூடிய காயிதுகளில்

ஒருவராக இருந்தார். 1992 -ல் டோட்டரி பள்ளிவாசலின் பாதுகாப்பிற்காக இருந்த போது 22 பேர் கைதிகளாக சிறை பிடிக்கப்பட்டனர். அதில் இவரும் அடங்குவார். இவருடைய தந்தையார் ஒரு சிறந்த வழக்கறிஞர் ஆவார். இதன் காரணமாக இவர் நீதிமன்றத்திற்கு வரும் போது சில நேரம் காவல்துறையினர் தமது நாற்காலியை இவருக்கு கொடுத்து விடுவார்கள். இவர் எப்போதும் அதில் தாம் உட்காராமல் அன்சார்களை அதில் உட்கார வைப்பார். ஒருமுறை நீதிபதி நான் உங்களுடைய மகனை விடுதலை செய்கிறேன் என்று கூறிய போது என்னுடைய பார்வையில் 22 பேரும் எனது மகன்கள் ஆவர். எல்லாரையும் விடுதலை செய்யுங்கள். இல்லையென்றால் இவனையும் உள்ளே வையுங்கள் என்றார். இவரது தந்தையும் மிகவும் தூய்மையானவராக இருந்தார். இவரது குடும்பம் மிகவும் விசுவாசமுள்ள குடும்பமாகும். விடுதலைக்குப் பிறகு மீதமிருந்த 3 குத்தாம்களையும் இவர் தமது வண்டியில் 8 வருடங்கள் தொடர்ந்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி மீண்டும் வீட்டில் கொண்டு வந்து விட்டுக் கொண்டிருந்தார்கள். 1999-ல் இவர் ஆஸ்திரேலியா சென்று விட்டார். அங்கேயும் அவர்கள் இறை அருளால் ஜமாஅத்திற்கு பல தொண்டுகளை செய்து வந்தார்கள். உமூரே ஆமா செயலர், தஃலீம் செயலர், பொதுச் செயலர் போன்ற தொண்டுகளை செய்து வந்தார். மஸ்ஜித் கமிட்டியின் ஒரு சிறந்த உறுப்பினராகவும் பணியாற்றினார். வஃபாத் ஆன நாளும் மஸ்ஜித் கமிட்டியின் உறுப்பினர்களுடன் சில இடங்களை பார்க்கப் போயிருந்தார்கள். திரும்பி வந்ததும் வீட்டிலிருந்து சாலையைக் கடக்கும் போது விபத்தில் உயிரிழந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவர் மிகவும் கீழ்படிதல் உள்ளவராவார். ஜமாஅத் சார்பாக ஏதாவது ஒரு பணி இவரிடம் ஒப்படைக்கப்பட்டால் இவர் மிகவும் கடின உழைப்போடும் மிகவும் தூய மனப்பான்மையுடனும் விசுவாசத்துடனும் உரிய நேரத்திற்குள் செய்து முடிப்பார். இவர் ஜமாஅத்திற்கு தொண்டாற்றிக் கொண்டிருந்த வேளையில் வஃபாத் ஆகியுள்ளார்கள். இது அவருக்கு கிடைத்த ஒரு மாபெரும் கண்ணியமாகும். இவர் மிகவும் நல்லொழுக்கம் கொண்டவரும், நேர்மையானவரும் ஆவார். தேவை உடையவர்களுககு மறைவாக உதவிகள் செய்பவராவார். எல்லாருடனும் மரியாதையுடனும் நடந்து கொள்வார். ஜமாஅத்தில் ஒவ்வொருவரையும் மதித்து வந்தார். குறிப்பாக பொறுப்பாளர்களுக்கு அதிக மரியாதை கொடுத்து வந்தார். இவர் வஸிய்யத் செய்தவராவார். இறைவன் இவரது பதவிகளை உயர்த்துவானாக! இவர்களை இழந்தவர்களுள் ஒரு மனைவியும் 3 மகள்களும் உள்ளனர்.

இவர்கள் அனைவரின் ஜனாஸாவையும் நான் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு தொழ வைப்பேன். இறைவன் அனைவரின் பதவிகளையும் உயர்த்துவானாக!

★ ★ ★ ★ ★

JUMUA KHUTBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 08.07.2011

Translated by : Maulavi S. ABDUL QADIR Sb.
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456